**சுருக்கம்**

நெடுஞ்சாலைத் துறை – தமிழகத்தின் பல்வேறு நகராட்சிகளின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அரசு சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக நகராட்சிகள்/ மாநகராட்சிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையினை தள்ளுபடி செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைத் (எச்.என்–1) துறை

அரசாணை (நிலை) எண்.189 நாள்:30-07-2008

திருவள்ளுவர்
ஆண்டு 2039,
ஆடி 15–ம் நாள்

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.381, நெடுஞ்சாலைத் துறை, நாள் 28–08–1997.
2) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, கடித எண். கணக்கு V / MGL-II/ 33 . 2002, நாள் 18–04–2002.

-----

**ஆணை:**

நெடுஞ்சாலைத் துறை விதித் தொகுப்பு – தொகுதி IV-ல் பத்தி 194 (1)–ல் உள்ள விதிமுறைகளின்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ல் பிரிவு 123–ன் படியும் நகராட்சி எல்லைகளிலுள்ள (தேசிய நெடுஞ்சாலை தவிர) பிற அரசு சாலைகளில் மேற்கொள்ளப்படும் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பாலப்பணிகளுக்கான மதிப்பீட்டில் 25% தொகையை சம்பந்தப்பட்ட நகராட்சிகள் செலுத்த வேண்டும். மேலும், அத்தொகையில் 10% சென்டேஜ் கட்டணமாக செலுத்த வேண்டும். ஆக மொத்தத்தில் மதிப்பீட்டில் 26.875% தொகையை நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டும். ஆனால் நெடுஞ்சாலைத் துறை பல்வேறு நகராட்சிகளின் எல்லைகளில் மேற்கொண்ட சாலைப் பணிகளின் மொத்த மதிப்புத் தொகையில் நகராட்சிகளின் பங்கு பல ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் உள்ளது என்றும், இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மாநில கணக்காயர் (தணிக்கை) அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டார். அதனை ஆய்வு செய்த அரசு, 1989ம் ஆண்டு வரை நிலுவையிலுள்ள தொகையினை முழுவதுமாக தள்ளுபடி செய்யலாம் என்றும், 1990 முதல் நிலுவையிலுள்ள தொகையை உடனடியாக நெடுஞ்சாலைத் துறைக்கு நகராட்சி ஆணையர்கள் செலுத்த வேண்டும் என்றும் அரசு அரசாணை (நிலை) எண். 381, நெடுஞ்சாலைத் துறை, நாள் 28–08–1997ல் ஆணையிட்டது.

2. இந்த ஆணையின் அடிப்படையில், இணைப்பு–1ல் குறிப்பிட்டுள்ள நகராட்சிகள் / மாநகராட்சிகளிடமிருந்து 1989ம் ஆண்டு வரை மொத்தம் ரூ.1,96,61,840/– நிலுவைத் தொகை பெற வேண்டியுள்ளது என்றும், எனவே அதை தள்ளுபடி செய்து ஆணையிடுமாறும் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கேட்டுக் கொண்டார். மேலும், இணைப்பு–2ல் குறிப்பிட்டுள்ள நகராட்சிகள் / மாநகராட்சிகளிடமிருந்து 1990 முதல் மார்ச் 1998 வரையில் பெற வேண்டிய மொத்த பங்குத் தொகை ரூ.2,39,51,546/– நிலுவையிலுள்ளது என்றும் தலைமைப் பொறியாளர் (பொது)

தெரிவித்துள்ளார். 1998–க்கு பின்னரும் பல நகராட்சிகள் / மாநகராட்சிகள் இவ்வாறான பங்குத் தொகையை செலுத்தவில்லை என்றும் தலைமைப் பொறியாளர் (பொது) தெரிவித்துள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள அரசு சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக 1989 வரை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் செலுத்தாது நிலுவையிலுள்ள பங்குத் தொகை ரூ.1,96,61,840/–ஐயும், 1990 முதல் 1998 வரையிலான காலத்திற்கு நிலுவையிலுள்ள பங்குத் தொகை ரூ.2,39,51,546/–ஐயும் தள்ளுபடி செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இதைத் தவிர 1998 முதல் இந்நாள் வரையுள்ள காலத்திற்கான நிலுவைத் தொகையையும் தள்ளுபடி செய்வதோடு, இனி வருங்காலங்களில் இத்தகைய பங்களிப்புத் தொகையை வசூலிக்கத் தேவையில்லை எனவும், இது தொடர்பான விதிகளுக்கு தக்க திருத்தங்கள் மேற்கொள்ளலாம் எனவும் அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில் அரசு முடிவு செய்துள்ளது.

4. அதனடிப்படையில் நெடுஞ்சாலைத் துறை விதித் தொகுப்பு – தொகுதி IV-ல் பத்தி 194 (1)–ல் உள்ள விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ல் பிரிவு 123–ன் படியும், இணைப்பு–1ல் குறிப்பிட்டுள்ள நகராட்சிகள் / மாநகராட்சிகள் 1989 வரை அரசுக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூ.1,96,61,840/–ஐயும் (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்), இணைப்பு–2ல் குறிப்பிட்டுள்ள நகராட்சிகள் / மாநகராட்சிகள் 1990 முதல் 1998 வரை செலுத்த வேண்டிய மொத்த பங்குத் தொகை ரூ.2,39,51,546/–ஐயும் (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐநூற்று நாற்பத்தாறு மட்டும்), தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் மேற்படி விதிகளின் கீழ் 1998 முதல் இவ்வாணை வெளியிடப்படும் நாள் வரை அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள பங்குத் தொகை முழுமையையும் தள்ளுபடி செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், இனிவரும் காலங்களிலும் இத்தகைய பங்களிப்புத் தொகையை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிடமிருந்து வசூலிக்க தேவையில்லை எனவும் அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பான விதிகளுக்கு தக்க திருத்தங்கள் செய்வதற்கான கருத்துருவினை உடனடியாக அரசுக்கு அனுப்புமாறு நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பொது) அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறை ஒப்புதலுடன் அ. சா. கு. எண். 46200 / பொ.ப – 1 / 2008, நாள்: 29-07-2008 –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்

அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர்(பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–15.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
நகராட்சிகளின் ஆணையர், குறளகம், சென்னை – 108.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
ஆணையர், மதுரை மாநகராட்சி.
ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி.
நகல்:
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.
தேசிய தகவல் மையம், சென்னை – 9.
இ.கோ. / உ.ந.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

# இணைப்பு – 1

## 1989–ம் ஆண்டு வரை நகராட்சிகள் / மாநகராட்சிகள் சாலை மேம்பாட்டுக்காக அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையின் நிலுவை விவரம்.

| வ.எண். | நகராட்சி | நிலுவைத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | **2,23,831** |
| 2. | வேலூர் | 3,36,806 |
| 3. | ஆற்காடு | 7,20,913 |
| 4. | பட்டுக்கோட்டை | 7,36,500 |
| 5. | நாகப்பட்டினம் | 1,67,545 |
| 6. | மயிலாடுதுறை | 1,63,090 |
| 7. | கோயம்புத்தூர் மாநகராட்சி | 7,92,450 |
| 8. | திருப்பூர் | 59,995 |
| 9. | மேட்டுப்பாளையம் | 9,07,500 |
| 10. | மதுரை மாநகராட்சி | 34,13,879 |
| 11. | திருவாரூர் | 60,58,000 |
| 12. | காரைக்குடி | 6,05,000 |
| 13. | தேவக்கோட்டை | 13,82,656 |
| 14. | உதகமண்டலம் | 6,59,921 |
| 15. | குன்னூர் | 7,92,254 |
| 16. | இராமநாதபுரம் | 1,02,803 |
| 17. | தாம்பரம் | 2,42,153 |
| 18. | திருநெல்வேலி மாநகராட்சி | 22,96,526 |
| | மொத்தம் | **1,96,61,840** |

கா. அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

# இணைப்பு – 2

## 1990 முதல் 1998 வரை நகராட்சிகள் / மாநகராட்சிகள் சாலை

## மேம்பாட்டுக்காக

## அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையின் நிலுவை விவரம்.

| வ.எண். | நகராட்சி | நிலுவைத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | வேலூர் | 1,10,000 |
| 2. | ஆற்காடு | 2,71,084 |
| 3. | திருவாரூர் | 60,58,000 |
| 4. | விருதுநகர் | 25,42,375 |
| 5. | கோபிச்செட்டி பாளையம் | 3,66,268 |
| 6. | சத்தியமங்கலம் | 1,11,222 |
| 7. | உதகமண்டலம் | 67,62,942 |
| 8. | குன்னூர் | 40,64,078 |
| 9. | இராமநாதபுரம் | 2,27,072 |
| 10. | தாராபுரம் | 3,57,535 |
| 11. | சேலம் | 17,23,978 |
| 12. | நாமக்கல் | 3,66,967 |
| 13. | திருச்செங்கோடு | 3,36,964 |
| 14. | குமாரபாளையம் | 3,33,313 |
| 15. | ராசிபுரம் | 2,58,276 |
| 16. | வாணியம்பாடி | 61,472 |
| | **மொத்தம்** | **2,39,51,546/-** |

கா. அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.